1981 ஏப்ரல் 2]

பிரதமரோடு நெருங்கிய பழக்கம் உள்ளவர்கள். அவர் டெக்னிக்கல் அசிஸ்டென்ஸ், நவீன இயந்திரங்களையும், புராஸஸிங், பிளிச்சிங், பிரின்டிங் போன்றவற்றிற்காக கேந்திரங்களை அமைத்துக் கொடுப்பதற்காக டெக்னிக்கல் அஷிஸ்டென்ஸ் நமக்கு பிரியாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அதுபற்றிய விவரங்களை அறிக்கை மூலம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : கைத்தறி உற்பத்தி பெருகுவதற்காக நவீன வடிவமைப்பு நிலையங்களை அமைக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கைத்தறி துணிகள் ஏற்கெனவே தேக்கமடைந்து இருக்கின்றன, நல்ல டிசைன் துணிகளே விற்க முடியாது தேக்கம் ஏற்பட்டிருப்பதால் கைத்தறி தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தேக்கமடைந்த துணிகளை உடனடியாகக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பியோ அல்லது ஏலம் போட்டோ விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலமாக கைத்தறித்தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : பரிசிலிக்கப்படும்.

சேலம் மாவட்டம் வெள்ளார் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம்.

*வினா எண்: 611—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், வெள்ளார் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் மருத்துவமனை துவக்கப்படும்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழாது.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளார் கிராமத்திலே இரண்டாவது கால்நடை மருத்துவமனையை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை மேச்சேரி ஒன்றியத்தினுடைய ஆணையரிடமிருந்து வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளார் கிராமம் சேலம் மாவட்டம் மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்திலே மேச்சேரியில் ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. மேச்சேரியிலிருந்து வெள்ளார் கிராமம் 8 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. ஆகவே, மேலும், ஒரு மருந்தகம் ஏற்பட்டால் அது அந்த ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது கால்நடை மருந்தகம் ஆகும். மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், வெள்ளார் கிராமத்தில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்த வேண்டுமென்று மட்டுமே தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. ஆனால், இரண்டாவது கால்நடை மருந்தகமாக ஏற்படுத்தக்கோரும் கால்நடை மருந்தகத்திற்காகும் செலவினத்தில் 50 சதவீதம் பங்குத் தொகை கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்டத் தேவையான நிலம் மற்றும் நிரந்தரக் கட்டிடம் கட்டி முடிக்கும் வரையில் வாடகையில்லாத கட்டிடம் ஒதுக்குவது சம்பந்தமான தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. மேற்கூறிய தீர்மானங்களைப் பெற கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். அவரிடமிருந்து செயற்குறிப்பு முழு வடிவில் அரசுக்கு வந்தவுடன் வெள்ளாரில் கால்நடை மருந்தகம் ஆரம்பிப்பது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

தகவல் கோரல்

(அ) அரசுத் துறைகளில் பெயர்ப்பலகைகள் தமிழில் இருத்தல்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, பக்கத்திலிருக்கின்ற நம்முடைய புதிய பில்டிங்கிலே ஒவ்வொரு துறைக்கும் செயலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், பெயர்ப் பலகை பூராவும் ஆங்கிலத்திலே இருக்கிறது. எனவே, ஆங்கிலம் தெரியாதவர்கள் எந்த மாடிக்குப் போவது என்று தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு இடத்திலும் தமிழிலே எழுதி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை அரசு கவனத்தில் சொல்லலாம்.